கடிதம் (1டி) எண். 35/மா.அ.தி.1/08 நாள் 22.1.2008

அனுப்புநர்
திரு. க. அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

அம்மையீர்,

பொருள் : சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–2008 – தருமபுரி மாவட்டம் – அரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்குப் பதிலாக அரூர் நகரின் மையப் பகுதியில் புதிதாக சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கு அனுமதி கோரியது – அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை :
1. அ.ஆ.(நி)எண்.64, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 17.5.2007.
2. அரசு கடிதம் எண்.19943/மா.அ.தி.2/07–1, ஊரக வளர்ச்சித்துறை நாள் 18.6.2007.
3. திரு.பி.டில்லிபாபு, அரூர் சட்டமன்ற உறுப்பினர், கடிதம் நாள் 26.4.2007.
4. தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நே.மு. கடிதம் எண்.2132/ 06/R2 நாள் 11.6.2007 மற்றும் 10.12.2007.
5. தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொதுப்பணித்துறை, சென்னை–5 கடிதம் உசெபொதொ15/17933/07, நாள் 24.7.07.

----

பார்வை 4ல் உள்ள கடிதத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர், அரூர் சட்டமன்ற உறுப்பினரின் தற்போதைய அலுவலகமானது அரூர் நகரில் இருந்து 2கி.மீ. தூரத்தில் உள்ளது என்றும், அதனால் பொதுமக்கள் வந்து செல்வதற்கு இடையூறாக உள்ளதால் அரூர் நகரின் மையப் பகுதியில் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட இடம் ஒதுக்கி, 2007–2008ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து எடுத்துச் செய்ய அரூர் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்துள்ளார் என்றும், அரூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதியதாக அரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்கான நிலம் பெறுவது குறித்து முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும், மேலும், அரூரில் தற்போது இயங்கிவரும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை பட்டுப்பூச்சி வளர்ப்புத் துறையின் தொழில்நுட்ப பழுதுபார்ப்பு மையமாக பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். எனவே, 2007 – 2008 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து அரூரில் புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.9.80 இலட்சத்தினை விடுவிக்க சிறப்பு அனுமதி அளிக்குமாறு அரசிடம் கோரியுள்ளார்.

2) தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறை அவர்கள் அரூர் தொகுதிக்கு புதிய சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கான மதிப்பீட்டினை 2007–2008ஆம் ஆண்டு விலை விகிதப்படி தயாரித்து பணிக்கான முக்கியத்துவம் ஆகியவற்றை குறிப்பிட்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3) பார்வை 1 மற்றும் 2ல் உள்ள அரசாணை/கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் 2007–2008ஆம் ஆண்டிற்கான திட்ட செயலாக்கத்திற்கான தொகுக்கப்பட்ட திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. இந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி மத்திய, மாநில அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள்/அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் இவற்றின் அலுவலக கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுவது, தடை செய்யப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

4) எனினும், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன்படி, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை சிறப்பு நிகழ்வாக ஏற்றுக் கொண்டு, அரூர் நகருக்கு 2கி.மீ. தூரத்தில் ஏற்கனவே உள்ள சட்டமன்ற உறுப்பினர் பழைய அலுவலகத்தை பட்டுப்பூச்சி வளர்ப்பு துறை வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அரூர் நகரில் புதியதாக சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டும் பணியினை எடுத்துச் செய்வதற்கான சிறப்பு அனுமதியை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.